# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 161/4 — 1975 අප්‍රේල් 28 වැනි සඳුදා — 1975.04.28

161/4 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ம் திகதி திங்கட்கிழமை

( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : என். 136/75

விசாரணை ஆணைக்குழுக்கள் பற்றிய அதிகாரச் சட்டம் (393 ஆம் அத்தியாயம்) 19 (1) ஆம் பிரிவின்கீழ், இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த திருவாளர் டி. கே. சுபசிங்க, அவர்களை 1975 ஏப்பிறில் 18 ஆம் திகதியிலிருந்து, மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின்கீழ், 1975 ஏப்பிறில் 2 ஆம் திகதியிலிருந்து, இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வித்தியாலங்கார வளாகத்தில் கிட்டத்தில் நடந்த தொந்தரை பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயலாளராக சனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,

எச். ஜீ. டி. விஜேசிங்க,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1975 ஏப்பிறில் 23.

4–558

---

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் யாக்கங்கள் சட்டம்

33 ஆம் பிரிவின்படியான கட்டளை

கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சர் ரிக்கிரி பண்டா சுபசிங்கா ஆகிய நான் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் யாக்கங்கள் சட்டத்தின்3 ஆம் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பெற்ற அதிகாரங்களின் மூலம் அச்சட்டத்தின் (2) ஆம் பிரிவின்படி விடுக்கப்பெற்றதும் 1958 சனவரி 10 ஆம் தேதிய 11,237 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கூட்டிணைப்புக் கட்டளையின் படி தாபிக்கப்பெற்ற தேசிய புடவை யாக்கத்தின் பொருட்டு இத்துடனுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பெற்றுள்ள காணியின் உத்தேச ஈட்டத்தை இந்தக் கட்டளையின் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றேன்.

கொழும்பு,
1975 ம் வருடம் ஏப்பிரல் மாதம் 21 ந் தேதி.

ரி. பி. சுபசிங்கா,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்.

### அட்டவணை

சப்பிரகமுவா மாகாணத்தில் கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகலைக்கொறளையின் உத்தரப்பட்டுவைச் சார்ந்த துல்கிரியாவில் அமைந்துள்ள நுகவெலகென, பூவெலகெனகெல்ல, வெல்லங்கொலகென என்றும் தெரியப்படுவதான நுகவெலகவாவத்தை என அழைக்கப்படும் ஆறு ஏக்கர்கள், இரு றூட்டுக்கள் முப்பத்திநான்கு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (6ஏ. 2றூ. 34·25பே) பரப்பளவைக்கொண்டதான அப்பகிர்வீட்டுக் காணி கீழ்வருமாறு எல்லையைக்கொண்டமைந்துள்ளது :—

வடக்கு : முடிக்குரிய காணியாலும், கே. ஏ. பொடிமகத்தயா என்னையோரால் கோரப்படும் காணியாலும்;
தெற்கு : டி. பி. தோமிஸ், டி. பி. குணதாச, டி. பி. பிரேமதிலகா ஆகியோராலும் ஏனையோராலும் கோரப்படும் காணி;
கிழக்கு : ஜே. எச். சுகததாசாவாலும் ஏனையோராலும் கோரப்படும் காணியாலும் கிராமவாசிகட்குக் கொடுக்கப்பட்ட முடிக்குரிய காணியாலும்;
மேற்கு : கொழும்பிலிருந்து கேகாலைக்குச் செல்லும் பிரதான வீதி.

4–559

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.